செ.வெ.எண்: 40 நாள்: 16.03.2020

**தூத்துக்குடி மாவட்ட ஆட்சித்தலைவர் அலுவலகத்தில் நடைபெற்ற மக்கள் குறைதீர்க்கும் கூட்டத்தில், 16 பயனாளிகளுக்கு ரூ.8.91லட்சம் மதிப்பிலான நலத்திட்ட உதவிகளையும், 3 நபருக்கு கருணை அடிப்படையில் பணி நியமன ஆணையினையும் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சந்தீப் நந்தூரி, இ.ஆ.ப., அவர்கள் வழங்கினார்.**

---

தூத்துக்குடி மாவட்ட ஆட்சித்தலைவர் அலுவலகத்தில் மக்கள் குறைதீர்க்கும் கூட்டம், மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சந்தீப் நந்தூரி, இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் இன்று (16.03.2020) நடைபெற்றது.

கூட்டத்தில் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள், முதியோர் உதவித்தொகை, திருமண உதவித்தொகை, மாற்றுத்திறனாளிகளுக்கான உதவித்தொகை, வீட்டுமனைப்பட்டா, பட்டா பெயர் மாற்றம், கல்விக்கடன், தொழிற்கடன் உள்ளிட்ட பல்வேறு நலத்திட்ட உதவிகள் வேண்டிய கோரிக்கைகள் அடங்கிய மனுக்களை, பொதுமக்களிடமிருந்து பெற்றுக்கொண்டார். மேலும், மனுக்கள் மீது உடனடி நடவடிக்கை மேற்கொள்ள சம்பந்தப்பட்ட துறை சார்ந்த அலுவலர்களுக்கு அறிவுறுத்தினார்கள். பின்னர், மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள், மாற்றுத்திறனாளிகளின் இருப்பிடங்களுக்கு சென்று கோரிக்கை மனுக்களை பெற்றுக்கொண்டார்.

அதனைத்தொடர்ந்து, சமூக பொறுப்பு நிதி மூலம் 10 மாற்றுத்திறனாளிகளுக்கு தலா ரூ.58,400/- மதிப்பிலான இணைப்பு சக்கரம் பொருத்தப்பட்ட பெட்ரோல் ஸ்கூட்டர்களையும், மாற்றுத்திறனாளிகள் நலத்துறை மூலம் தமிழ்நாடு முதலமைச்சரின் காப்பீட்டுத்திட்டத்தின் மூலம் 5 மாற்றுத்திறனாளிகளுக்கு ரூ.2.82 இலட்சம் மதிப்பிலான செயற்கைகால் உதவி உபகரணங்களையும், கிங்ஸ் பொறியியல் கல்லூரியில் இரண்டாம் ஆண்டு பயிலும் நாரயணன் என்ற மாணவனுக்கு கல்வி உதவித்தொகையாக ரூ.25,000/-த்திற்கான காசோலையினை என மொத்தம் 16 பயனாளிகளுக்கு ரூ.8.91 இலட்சம் மதிப்பிலான நலத்திட்ட உதவிகளை மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் வழங்கினார். மேலும், சத்துணவு திட்டத்தின் மூலம், புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர். சத்துணவு திட்டம், தூத்துக்குடி, திருவைகுண்டம் மற்றும் கயத்தார் ஒன்றியங்களில் பணியாற்றி பணியிடைக்காலமான 3 சத்துணவு பணியாளர்களின் வாரிசுதாரர்களுக்கு கருணை அடிப்படையில் சத்துணவு அமைப்பாளர் பணிக்கான பணி நியமன ஆணையினை மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் வழங்கினார்.

கூட்டத்தில் கூடுதல் ஆட்சியர் (வருவாய்) திரு.பா.விஷ்ணு சந்திரன், இ.ஆ.ப., தூத்துக்குடி சார் ஆட்சியர் திரு.சிம்ரோன் ஜீத் சிங் காலோன், இ.ஆ.ப., மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் நேர்முக உதவியாளர்கள் திருமதி.அமுதா (பொது), திரு.சிதம்பரம் (சத்துணவு), திருமதி.கிறிஸ்டி (கணக்கு), மாவட்ட கருவூல அலுவலர் திருமதி.பாமினி லதா, சமூக பாதுகாப்பு திட்ட தனித்துணை ஆட்சியர் திரு.சங்கரநாராயணன், மாவட்ட மாற்றுத்திறனாளிகள் நல அலுவலர் திரு.பிரம்மநாயகம் மற்றும் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

**வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், தூத்துக்குடி மாவட்டம்.**